OS:685/2018

Date: 07.12.2024

பெயர் :சேகர்

**பிரதிவாதி தரப்பு சாட்சி 2 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்து.**

**<u>குறுக்கு விசாரணை :</u>-**வாதி தரப்பில்

08.11.2006 ம் தேதியில் கந்தசாமி சம்பூரணத்திற்கு தானசெட்டில்மெண்ட் எழுதிகொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கந்தசாமி, சம்பூரணம் ஆகியோர் 08.11.2006 ம் தேதி காலை தான் என்னை நேரில் சந்தித்து தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதவேண்டும் என சொன்னார்கள் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் சுமார் 12 முதல் 12.30 மணிக்குள் பதிவு செய்யப்பட்டது. கந்தசாமியும், சம்பூரணமும் என்னை சந்தித்த போது என்ன ஆவணங்கள் கொண்டு வந்தார்கள் என்றால் அவர்களுக்கு உரிமையான பட்டாவை கொண்டுவந்தார்கள் UDR பட்டா எண்.9 கொண்டுவந்தார்கள். அந்த பட்டாவை நான் முழுமையாக படித்து பார்த்துதான் நான் தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதினேன் என்றால் சரிதான். அந்த UDR பட்டாவில் எத்தனை ஏக்கர் இருந்தது என்றால் மொத்தம் 5 ஏக்கர் 10 செண்ட் நிலம் இருந்தது. அந்த 5 ஏக்கர் 10 செண்ட் நிலமும் பிரிக்கப்படாத சொத்து என்றால் கந்தசாமியின் முழு சொத்து ஆகும். நான் எழுதிய பத்திரத்தில் என்னுடைய தாயாருக்கு கிரயம் மூலம் பாத்தியப்பட்டு அவருக்கு பின்னிட்டு என்னுடைய அனுபவத்தில் வந்த சொத்து என செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிட்டு எழுதியுள்ளேனா என்றால் இல்லை.

பொதுவாக ஒரு தாயாரிடம் இருந்தோ, தகப்பனாரிடம் இருந்தோ வந்த சொத்தை எனக்கு பட்டா மூலம் பாத்தியப்பட்டு அனுபவத்தில் உள்ள சொத்து என ஆவணத்தில் குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான். 08.11.2006 செட்டில்மெண்ட் ஆவணத்தில் செக்குபந்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆம். அந்த செக்குபந்தியில் இவ்வளவு தான் இடம் என விஷ்தீரனம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 5 ஏக்கர் 10 செண்ட் நிலத்தை அளந்தால் மட்டும் தான் 2 ஏக்கர் நிலம் செக்குபந்திக்குள் வருகிறது என்பது தெரியவரும் என்று சொன்னால் அளக்க வேண்டியதில்லை செக்குபந்தி போட்டால் போதும்.

மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் செக்குபந்திகள் கொடுத்தது யார் என்றால் கந்தசாமி தான் சொன்னார். தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் செக்குபந்தி குறிப்பிடப்பட்டது தவறு என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் எனக்கு சொந்தமான எனது சுவாதீனத்தில் என குறிப்பிட்டுள்ளேன், ஆனால் எனக்கு பிதுராஜ்ஜியமாக பாத்தியப்பட்ட சொத்து என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொதுவாக விடுதலை பத்திரத்தில் தான் மற்ற வாரிசுதாரர்களுக்கு இரத்த சம்மந்தப்பட்ட உறவை தவிர சொத்து சம்மந்தப்பட்ட உரிமை இல்லை என்று குறிப்பிடுவார்கள் என்றால் சரிதான். அந்த வாசகத்தை 08.11.2006 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, குறிப்பிடவில்லை. நான் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் முதல் விசாரணை சாட்சியம் அளித்ததில் செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சொத்துக்களை பொறுத்து கந்தசாமியின் இரத்த சம்மந்தமான ஆண், பெண் வாரிசுகளுக்கு எந்த உரிமையும் ஏற்படுவதில்லை என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் என சாட்சியம் அளித்துள்ளேன்.

மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் என்னால் தயாரிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கு 3, 4 பிரதிவாதிகளான சம்பூரணமும், மனோகரனும் எழுதிகொடுத்த வாசகங்களை வைத்தே மேற்படி ஆவணம் என்னால் தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 08.11.2006 தானசெட்டில்மெண்ட் ஆவணமானது 3 ம் பிரதிவாதியின் கணவர் 4 ம் பிரதிவாதியின் ஆலோசனையின்பேரில் தான் இந்த செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை தயாரிக்காமல் 3, 4 பிரதிவாதிகளின் ஆலோசனை பேரில் தாயாரிக்கப்பட்டது என்பதால் இந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி சம்பூரணம் 24.11.2011 தேதியில் அவரது கணவரான 4 ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி பதிவு செய்துகொடுத்துள்ளார் என்றால் சரிதான், மேற்படி 24.11.2011 தேதி 4 ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணமும் நான் தான் தயாரித்துகொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி 24.11.2011 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் இரத்த சம்மந்தமான உறவுகள் தவிர சொத்து சம்மந்தமான உரிமைகள் இல்லை என குறிப்பிட்டு எழுதப்பட்டதா என்றால் இல்லை. 3, 4 பிரதிவாதிகள் திருமணம் செய்துகொண்டார்கள் அந்த திருமணத்திற்கு எந்த சீர்வரிசையும் செய்யவில்லை

என்பதால் 2006 ல் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதுவதாக கந்தசாமி சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 24.11.2011 தேதியில் தானசெட்டில்மெண்ட் எழுதும்போது உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டதா என்றால் உட்பிரிவு செய்யப்பட்டு விட்டது அதன் உட்பிரிவு எண்.51/2B ஆகும். அதற்குரிய பட்டாவினை கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். கந்தசாமிக்கு சம்பூரணத்தை தவிர மற்ற ஆண், பெண் வாரிசுகள் இருப்பதாக கந்தசாமி சொன்னாரா என்றால் நானும், கேட்டேன் மேற்படி சம்பூரணத்தை தவிர மற்ற வாரிசுகள் உள்ளார்கள் என்றும், நான் சம்பூரணத்திற்காக இந்த செட்டில்மெண்ட் எழுதிகொடுப்பதாக சொன்னார். 08.11.2006 ல் சம்பூரணத்திற்கு செட்டில்மெண்ட் எழுதப்படும் போது என்ன வயதிருக்கும் என்றால் 24, 25 வயதிருக்கும். நான் எழுதியதாக சொல்லப்படும் 08.11.2006 செட்டில்மெண்ட் ஆவணம் நான் தயார் செய்யப்பட்டதில்லை என்றும், ஆகவே அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றும், 08.11.2006 செட்டில்மெண்ட் ஆவணமே செல்லத்தக்க ஆவணம் அல்ல என்பதால் அதன் அடிப்படையில் எழுதப்பட்ட 24.11.2011 தேதி 4 ம் பிரதிவாதி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணமும் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் கந்தசாமி வந்து எந்த செக்குபந்தியும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல, மேற்படி 3 ம் பிரதிவாதி சம்பூரணத்தின் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணத்திற்கான செக்குபந்திகளும், ஆவண வாசகங்களும் 4 ம் பிரதிவாதியின் ஆலோசனையின்பேரில் தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் 4 ம் பிரதிவாதியின் வேண்டுகோளுக்கிணங்க நீதிமன்றத்தில் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**:- இல்லை.

ஒப்பம்/-DW2

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்